## வரலாறு - பகுதி 5 to 10

## 5. சமணமும் பௌத்தமும்

- கி.மு. 6 ம் நூற்றாண்டில் பாரசீகத்தில் ஜொராஸ்டரும், சீனாவில் கன்பூசியசும் புதிய கருத்துக்களை போதித்தனர்.
- கி.மு. 6 ம் நூற்றாண்டுகளில் சிந்து சமவெளிப் பகுதியில் 62 சமயப் பிரிவுகள் இருந்தன.
- கி.மு. 6 ம் நூற்றாண்டு உலகின் சிந்தனைப் புரட்சிக் காலமாகும். அக்காலத்தில்தான் இந்தியாவில் சமண மதமும் பௌத்த மதமும் தோன்றின. இவ்விரு மதங்களும் சமய, சமூகச் சீர்திருத்த இயக்கங்களாக உருவெடுத்தன. இவை மூடநம்பிக்கைகள், தேவையற்ற சமயச் சடங்குகள் மற்றும் சாதிய ஏற்றத்தாழ்வுகளை அகற்றுவதை நோக்கங்களாகக் கொண்டிருந்தன.
- சமண மதத்தை உருவக்கியவர் வர்த்தமான மகாவீரர். பௌத்த மதக் கருத்துகளை வழங்கியவர் கௌதம புத்தர்.

**சமண புத்த சமயங்கள் தோன்ற காரணமாக இருந்தவை**

1. சடங்குகள், வேள்விகள், கடவுள் வழிபாட்டை சிக்கலாக்கின.

2. சடங்குச் செலவுகள் அதிகமாயின.

3. கடுமையான சாதி முறை ஏற்றத் தாழ்வுகளை உருவாக்கியது.

4. பாலி மொழி பேசும் மக்களால் சமஸ்கிருத சமய இலக்கியங்களை புரிந்து கொள்ள முடியவில்லை.

5. சமயக்குரவர்களின் ஆதிக்கம்.

6. மக்கள் விரும்பாத உயிர்பலிகள்.

**சமணம்**

- கி.மு. 6 ம் நூற்றாண்டில் தோன்றிய இந்த சமயம் வேத சமயத்தையும் சடங்குகளையும் ஒதுக்கியது.
- சமண மதத்தினரால் 24 தீர்த்தங்கரர்கள் வழிபடப்படுகின்றனர்.
- முதல் தீர்த்தங்கரர் ஆதிநாதர் எனப்படும் ரிஷபதேவர் ஆவார்.
- இவ்வரிசையில் இறுதியாக 24 ஆவதாக வந்தவர் வர்த்தமான மகாவீரர். இவர் சமண மதத்துக்கு உறுதியான ஓர் அமைப்பைத் தந்தார்.
- தீர்த்தங்கரர் என்றால் மதபோதகர் என்று பொருள்படும்

**மகாவீரர்**

- வர்த்தமான மகாவீரரின் காலம் கி.மு. 534 முதல் கி.மு. 462 வரை.

- இன்றைய பீகார் மாநிலத்தில், வைசாலி நகருக்கு அருகிலுள்ள குந்தக்கிராமம் என்னும் ஊரில் பிறந்தார்.
- இவரது தந்தை பெயர் சித்தார்த்தர். தாயின் பெயர் திரிசலை (லிச்சாவி மரபைச் சார்ந்த திரிசலா வைசாலி அரசின் சகோதரி). இவருக்கு யசோதா என்ற மனைவியும், அனோஜா பிரியதர்சனா என்ற மகளும் இருந்தனர்.
- வர்த்தமானர் தனது 30ஆம் வயதில் இல்வாழ்க்கையைப் புறந்தள்ளி முற்றிலும் ஒதுக்கிவிட்டுத் துறவியானார். அன்றைய காலக்கட்டத்தில் நிலவிய பல்வேறு பிரச்சனைகளுக்கு விடைதேடி 12 ஆண்டுகள் கடுமையான தியானத்தில் ஆழ்ந்து 42 வயதில் கைவல்யா என்று அழைக்கப்பட்ட ஆன்மீக அறிவு பெற்றார்.
- தம் வாழ்க்கையில் இன்பங்களையும், துன்பங்களையும் சமமாகப் பாவிக்கத் தொடங்கினார். உண்மையைத் தேடி வெற்றியும் கண்டார். இதன் காரணமாக வெற்றியாளர் என்பதைக் குறிக்கும் ஜீனர் என்ற சொல்லால் அழைக்கப்பட்டார்.
- மக்கள் அவரை மகாவீரர் என்றும் அழைத்தனர். தான் கண்ட உண்மைகளை ஊர் ஊராகச் சென்று 30 ஆண்டுகள் பிரச்சாரம் செய்தார்.
- மனிதர்களுக்குப் பிறப்பு, இறப்பு ஏன் ஏற்படுகின்றன? அவர்களுக்குத் துன்பங்கள் எதனால் ஏற்படுகின்றன? என்ற கேள்விகள் மகாவீரரின் மனத்தில் தோன்றின. மனிதர்கள், ஒருவரை ஒருவர் ஏன் துன்புறுத்த வேண்டும்? ஏன் ஏமாற்றுகிறார்கள் என்ற சிந்தனைகள் அவருக்குள் எழுந்தன. ஒருவேளை, முற்பிறவியில் செய்த பாவமாக இருக்கலாம் என்று ஒரு பிரிவினர் கூறினர்.
- கோசலம், மகதம், மிதிலை, சம்பா ஆகிய இடங்களில் தனது சமயத்தை பரப்பி ராஜகிரிக்கு அருகில் உள்ள பவபுரி என்னுமிடத்தில் தனது 72 வது வயதில் மரணமடைந்தார்.

**வர்த்தமானர் போதித்த மும்மணிகள் (போதனைகள்)**

1. நல்லறிவு
2. நன்னம்பிக்கை
3. நன்னடத்தை

இவை திரிரத்தினங்கள் (மூன்று ரத்தினங்கள்) என்று அழைக்கப்பட்டன.

**ஐந்து ஒழுக்கங்கள் / கொள்கைகள்:**

1. அகிம்சை / ஊறு செய்யாமை – தீங்கு செய்யாமை.
2. சத்யம் / பொய்யாமை – உண்மையே பேசுதல்.
3. அஸ்தேயம் / களவாமை – திருடாமை.
4. தியாகம் / உடைமை மறுத்தல் – எல்லா செல்வத்தையும் துறத்தல்.

5. பிரம்மச்சரியம் / புலனடக்கம் – தூய வாழ்க்கை.

**போதனைகள்**

- கடவுள் என்று ஒருவர் இருப்பதை நம்பவில்லை.
- மனிதனின் ஆத்ம ஒளியே கடவுள் என்று கருதினர்.
- மனிதர்களின் துயரத்துக்கு மனிதர்கள்தான் காரணம். மனிதர்களால் பிற உயிரிகளுக்கும் ஆபத்து ஏற்படக்கூடாது என்றார். இதற்காகக் கட்டுப்பாடுகளுடன் கூடிய வாழ்க்கை முறையைப் போதித்தார்.
- தமது கருத்துகளைப் பின்பற்றுபவர்களும் இந்தக் கட்டுப்பாட்டு நெறிகளைப் பின்பற்ற வேண்டும் என்றார். இது 'கொல்லாமைக் கொள்கை' என்று அழைக்கப்பட்டது. இதை ஏற்ற சமணர்கள் தம் உடலை வருத்தி, உணவு, நீர் எதுவும் அருந்தாமல் மனத்தை ஒரு நிலைப்படுத்தினர்.
- சமண சமயம் உயிரிரக்கம் எனப்படும் அகிம்சையை மிகவும் வலியுறுத்தியது. பிற உயிர்களுக்கு ஊறு செய்யக் கூடாது.
- ஆடைகள் அணிவதையும் போரிடுவதையும், வேளாண்மை செய்வதையும் தவிர்த்தனர்.
- உயிர்களை எதன் பொருட்டும் கொல்லக்கூடாது என்பது இச்சமயத்தின் அடிப்படைக் கோட்பாடாகும்.
- சமணர்களின் முக்கியத் தொழில் வணிகம்.
- தங்களைத் தாங்களே கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும் என போதிக்கப்பட்டது.
- அகிம்சையை போதித்த மகாவீரர் அனைத்து பொருட்களுக்கும் உயிர் உண்டு என்றார்.
- கர்மா என்ற தத்துவத்தை நம்பிய இவர் மேலான அறிவினைப் பெறுவதுதான் மிக உயர்ந்த நோக்கம் என்றார்.
- சங்கங்களை அமைத்தார். அதில் ஆண்களும் பெண்களும் இருந்தனர்.
- மகாவீரரை பினபற்றியவர்கள் திகம்பரர் என்றும் (ஆடைகளை துறந்தவர்), ஸ்வேதாம்பரர் (வெள்ளை ஆடை உடுத்தியவர்) என்றும் இருந்தனர்.
- இவர் தனது சமயக் கருத்துக்களை பிராக்கிருத மொழியில் பரப்பினார்.
- பாலி, பிராக்கிருதம், தமிழ் ஆகிய மொழி வளர்ச்சிக்கு சமணம் உதவியது.
- குஜராத்தின் வரலாறு எழுதிய ஹேமச்சந்திரர் சமண சமயத்தவர்.
- ஹேமச்சந்திரர் இரு அகராதிகளை இணைத்து பிராகிருத இலக்கண நூலையும், யோக சூத்திரம் என்ற மற்றொரு நூலையும் எழுதியுள்ளார்.
- அங்கங்கள், பூர்வங்கள் ஆகிய நூல்கள் சமணர்களின் புனித நூல்கள்.
- ரனக்பூர் சமணர்களின் ஐந்து புனிதத் தலங்களில் ஒன்று.
- தீவிர அகிம்சையை பெரும்பாலும் பின்பற்ற இயலவில்லை.
- சமய மூடநம்பிக்கைகளும், சண்டை சச்சரவுகளும் அக்காலத்தில் நிலவியதால் அவற்றை நீக்கிய சமணக் கொள்கைகள் விரைவாகப் பரவின.

**சமண சமயத்தைப் பின்பற்றிய அரசர்கள்:**

- சந்திரகுப்த மௌரியர், கலிங்கத்துக் காரவேலன், கூன்பாண்டியன், முதலாம் மகேந்திரவர்ம பல்லவர்.
- பிம்பிசாரர், அஜாதசத்ரு போன்ற வட இந்திய மன்னர்கள் சமண சமயத்திற்கு ஆதரவு அளித்தனர்.

**சமணர்களின் தமிழ் இலக்கிய, இலக்கணப் படைப்புகள்:**

- சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி (திருத்தக்க தேவர்), வளையாபதி, சூளாமணி முதலிய காப்பியங்களையும், யாப்பருங்கலக்காரிகை, யாப்பருங்கலவிருத்தி, நேமிநாதம், நன்னூல் (பவநந்தி முனிவர்), அகப்பொருள் விளக்கம், இலக்கண விளக்கம் போன்ற இலக்கண நூல்களையும், நிகண்டுகளையும், நாலடியார், நான்மணிக்கடிகை, பழமொழி, திணைமாலை நூற்றைம்பது முதலிய அற நூல்களையும், இயற்றிச் சமணர்கள் தமிழுக்குத் தொண்டாற்றியுள்ளனர்.

**சமணக் கட்டடக் கலை**

- இராஜஸ்தான் – மவுண்ட் அபு – தில்வாரா கோயில்
- கஜுராஹோ, சித்தூர், தனக்பூர் – சமணர் கோயில்கள்

**சிற்பங்கள்**

- உதயகிரி, ஹதிகும்பா, எல்லோரா, கிர்னார், கழுகுமலை மைசூருக்கு அருகிலுள்ள சரவணபெலகொலா என்ற இடத்தில் அமைந்துள்ள கோமதீஸ்வரர் சிலை.

**பௌத்த மதம்**

**புத்தர்**

- பௌத்த மதத்தைத் தோற்றுவித்தவர் சித்தார்த்தர் எனும் இயற்பெயர் கொண்ட கௌதமபுத்தர் ஆவார்.
- இவர் வாழ்ந்த காலம் கி.மு. 563 முதல் கி.மு. 483 வரையாகும். இன்றைய நேபாள நாட்டில் உள்ள கபிலவஸ்து என்னும் ஊரில் பிறந்தார்.
- இவரது தந்தை சாக்கியக் குலத்தைச் சேர்ந்த சுத்தோதனர், தாய் மாயாதேவி.
- சித்தார்த்தர் பிறந்த ஏழாவது நாளில் அவரது தாய் இறந்துவிட்டார். பின்னர், சித்தார்த்தர் பிறந்த தன் சிற்றன்னை மகா பிரஜாபதி கௌதமியால் வளர்க்கப்பட்டதால் கௌதம புத்தர் என்று அழைக்கப்பட்டார்.
- தனது 16 வது வயதில் யசோதரையை மணந்தார். இராகுலன் என்ற ஆண் மகவைப் பெற்றார்.
- சிறுவயது முதலே உலக நடப்புகள் குறித்து அறிந்து கொள்வதில் ஆர்வம் உள்ளவராக இருந்தார்.
- வேட்டையாடுதல், வீண் ஆடம்பரம் ஆகியவற்றில் அவருக்குச் சிறிதும் நாட்டம் இல்லை.
- வயதான மனிதன், நோயாளி, பிச்சைக்காரன், மரண ஊர்வலம் ஆகிய இந்த நான்கு காட்சிகள் அவர் மனத்தில் பல கேள்விகளை எழுப்பின.

- தனது 29 வயதில் மனைவி, மகன், தாய்-தந்தை என அனைத்து உறவுகளையும் துறந்தார். முதலில் அரதகலமா என்பவரிடம் சீடராக இருந்தார். பின் ருத்ரகா என்பவரிடம் உபதேசம் பெற்றார்.
- காட்டிற்குச் சென்று தவம் செய்தார். கயை என்ற இடத்தில் ஞானம் பெற்று புத்தர் என்றும் சாக்கியமுனி என்றும் அழைக்கப்பட்டார்.
- பசி, தாகம் அனைத்தையும் அடக்கினார். ஆனால், அவரது வினாக்களுக்கு விடை கிடைக்கவில்லை. மனம் தெளிவுபெறாமல், தன்னைத்தானே துன்புறுத்திக் கொள்வதை நிறுத்தினார்; உணவு உட்கொள்ளத் தொடங்கினார்; ஆழ்ந்து சிந்தித்தார்; உண்மை விளக்கம் பெற்றார்.
- ‘அறிவுணர்வு’ பெற்ற சித்தார்த்தர் ‘புத்தர்’ ஆனார். அவர் ‘அறிவுணர்வு’ பெற்ற இடம், கயாவில் உள்ள அரசமரத்தடியாகும்.
- ‘புத்தர்’ என்ற சொல்லின் பொருள் ‘புத்தியை வென்றவர்’ ‘நல்லது எது, கெட்டது எது, என்பதை அறிந்து கொண்டவர்’ என்பது ஆகும்.
- புத்தர் தனது முதல்போதனையை உத்தரப் பிரதேசத்தில் வாரணாசியின் அருகே சாரநாத்தில் உள்ள மான்பூங்காவில் தொடங்கினார்.
- கி.மு. 481 ல் உத்திரப்பிரதேசத்திலுள்ள குசி நகரம் என்னும் இடத்தில் இறந்தார்.

**புத்தரின் கோட்பாடுகள்**

- வாழ்க்கை துன்பமயமானது; ஆனால், அத்துன்பம் விதியினாலோ, முற்பிறப்பின் வினையாலோ வருவதில்லை. துன்பங்களுக்கு வேறு காரணங்கள் உண்டு. அவற்றை அகற்றினால், துன்பங்களிலிருந்து விடுபட முடியும்.
- பேராசை கொள்ளாமை, பொய் பேசாதிருத்தல், பிறரைத் துன்புறுத்தாமை ஆகிய நெறிகளைப் பின்பற்றவேண்டும். ஆழ்ந்து சிந்தித்தல், நல்ல சொற்களைப் பேசுதல், தேவைகளை மட்டும் நிறைவேற்றிக் கொள்ளுதல் போன்ற நெறிகளைப் பின்பற்றினால் துன்பம் நேராது என்றார்.
- சாதிப் பாகுபாடுகளை அவர் ஏற்கவில்லை. கடவுள், ஆன்மா, விதி என்று எண்ணி மனிதர்கள் பயப்பட வேண்டாம். சொந்த எண்ணங்களையும், அறிவையும் நம்பி வாழவேண்டும். மனிதர்கள், விலங்குகள், பறவைகள் என அனைத்து உயிர்களிடத்திலும் அன்பு கொள்ள வேண்டும் என்றார்.
- துன்பங்களைப்பற்றிப் புத்தர் கூறிய அறிவுரைகள், ‘நான்கு பேரூண்மைகள்’ என்று, ஒழுக்க நெறிகள் பற்றி அவர் போதித்தவை ‘எண்வகை நெறிகள்’ என்றும் அழைக்கப்படுகின்றன.

**நான்கு பேருண்மைகள்**

1. உலகம் துன்பமும் துயரமும் நிறைந்தது
2. துன்பத்திற்குக் காரணம் ஆசையே.
3. ஆசையை ஒழித்தால் துன்பத்திலிருந்து விடுபடலாம்

4. ஆசையை ஒழிக்க எட்டு நெறிகள் / அட்டமார்க்கம் என்னும் வழி துயரங்களிலிருந்து விடுவிக்கும்.

**ஆசையை ஒழிப்பதற்கான எட்டு நெறிகள்**

| | |
|---|---|
| 1. நல்ல நம்பிக்கை | 2. நல்ல பேச்சு |
| 3. நல்ல வாழும் வழி | 4. நல்ல சிந்தனை |
| 5. நல்ல முயற்சி | 6. நல்ல நடத்தை |
| 7. நல்ல செயல் | 8. நல்ல தியானம் |

**புத்தசமயம் பரவல்**

- தாம் அறிந்த உண்மைகளை உலகில் உள்ள அனைவரும் அறிய வேண்டும் என்பதற்காக ஊர் ஊராகச் சென்றார்.
- புத்தரின் கருத்துகளைப் பரப்ப, துறவிகள் முன்வந்தனர். பௌத்தத் துறவிகளின் இந்த அமைப்பு 'சங்கம்' எனப்பட்டது.
- சமுதாய ஏற்றத்தாழ்வுகளால் பாதிக்கப்பட்டிருந்த விவசாயிகள், ஏழைகள், பெண்கள், கடைநிலை ஊழியர்கள் புத்தரின் கருத்துகளை ஏற்றனர்.
- அனைவரும் சமம் என்ற புத்தரின் கருத்து அந்தக் காலத்தில் புதிதாக இருந்தது. இதனால், புத்தர் சென்ற இடமெல்லாம் பௌத்த மதம் பரவியது.
- கி.மு.6 ம் நூற்றாண்டு வரை சமண, பௌத்த மதங்கள் செல்வாக்குடன் பரவலாக பின்பற்றப்பட்டன. மீண்டும் வேத வைதீக வருணாசிரம மதம் செல்வாக்குப் பெறத் தொடங்கியதால் பிற்காலத்தில் சமண, பௌத்த மதங்களின் செல்வாக்கு மங்கத் தொடங்கின.
- பௌத்த சமயத்தைப் பின்பற்றிய அரசர்கள் – அசோகர், கனிஷ்கர், ஹர்ஷர். அவர்களில் முக்கியமானவர் அசோகர்.
- கர்மா கொள்கையில் நம்பிக்கை வைத்த புத்தர், கடவுள் கொள்கையை ஆதரிக்கவும் இல்லை. மறுக்கவும் இல்லை. நிர்வாண நிலையை அடைவது என்பதே புத்த சமயத்தின் அடிப்படை கொள்கையாகும்.
- புத்தருக்கு பின்வந்த சமயவாதிகள் போதிசத்துவர்கள் எனப்பட்டனர்.
- கனிஷ்கர் காலத்தில் புத்தமதம், ஹீனயானம், மஹாயானம் என இரண்டாகப் பிரிந்தது.

| மகாயான புத்த மதம் | ஹீனயான புத்த சமயம் |
|---|---|
| பெருவழி எனப்பட்டது | குறுகிய வழி எனப்பட்டது. |
| புத்தர் கடவுளாக வழிபடப்பட்டார் | புத்தர் சமயத் தலைவராக கருதப்பட்டார். |
| உருவ வழிபாடு இருந்தது | உருவ வழிபாடு இல்லை |
| திபெத், சீனா, ஜப்பான், இந்தியாவில் பரவியது. | மேற்கு நாடுகள், இலங்கை ஆகிய நாடுகளில் பரவியது. |
| சமஸ்கிருத மொழியினை பயன்படுத்தினர். | பாலி மொழி பயன்படுத்தப்பட்டது. |

**புத்தசமயம் பரவ காரணங்கள்**

- புத்தரின் போதனைகள் எளிமையானவை.
- பாலி மொழியில் எழுதப்பட்டன. மக்கள் அனைவரும் சமம் என்ற கொள்கை.
- கோசலம், கௌசாம்பி அரசர்கள், அசோகர், கனிஷ்கர், போன்றோரும் புத்த சமயம் பரவ உதவினர். அசோகர் காலத்தில் புத்த சமயப் போதகர்கள் எகிப்து, சிரியா, மாசிடோனியா சென்றனர்.
- அசோகரின் மகன் மகேந்திரனும், மகள் சங்கமித்திரையும் இலங்கைக்கு சென்றனர்.
- கனிஷ்கர் கல்லத்தில் பர்மா, ஜப்பான், திபெத், மத்திய ஆசிய நாடுகளுக்கு சீனாவின் வழியாக மத போதகர்கள் சென்றனர்.
- பண்டைய சேர அரசர்கள் புத்த சமயத்தை தழுவி ஆதரித்தனர்.
- இலங்கை, பர்மா, திபெத், சீனா, ஜப்பான், தாய்லாந்து ஆகிய நாடுகளில் இன்றளவும் பௌத்தமதம் பின்பற்றப்படுகிறது.

**தொண்டுகள்**

- நாலந்தா, வல்லாபி, காஞ்சி விக்கிரமசீலா போன்ற கல்வி மையங்கள் புத்த சமயக் கொள்கைகளை பரப்பின.
- காஞ்சி, வல்லாபி, நாளந்தா போன்ற இடத்தில் ஸ்தூபங்கள் அமைக்கப்பட்டன.
- காஞ்சியிலும் பர்கட்டிலும் புத்தரின் வரலாற்றை கூறும் சின்னங்கள் உள்ளன.
- குப்தர்கள் காலத்தில் இந்து சமயத்தில் ஏற்பட்ட மறுமலர்ச்சி புத்த சமயம் வீழ்ச்சியுற காரணமாக இருந்தன.

**வரலாற்றுச் சின்னங்கள்**

- பௌத்த சமய வரலாற்றை ஜாதகக் கதைகள் பெரிதும் விவரிக்கின்றன. கயா, சாஞ்சி, மத்திய பிரதேசத்தில் உள்ள பர்கட் ஆகிய இடங்களில் புத்தர் காலத்தின் பல படைப்புகள் காணப்படுகின்றன.
- அஜந்தா குகை ஓவியங்களும் எல்லோரா சிற்பங்களும் (மகாராஷ்டிரா மாநிலத்தில் ஔரங்காபாத் மாவட்டத்தில் உள்ளன) புத்தரின் சிறப்பை விவரிக்கின்றன. காந்தாரக் கலைச் சிற்பங்களும் புத்த சமயத்தைச் சார்ந்தது.
- பௌத்த சமயத் துறவிகளின் பிரார்த்தனைக் கூடங்கள் சைத்தியங்கள் என்றும், மடாலயங்கள் விகாரங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. இவை மலைக்குகைகளைக் குடைந்து அமைக்கப்பட்டவையாகும்.
- பௌத்தத் துறவிகளின் விகாரங்கள் (மடங்கள்) மிகுந்த மாநிலம் பீகார்.

**இலக்கியம்**

- புத்தரின் போதனைகள் / பௌத்த சமயக் கொள்கைகளைக் கூறும் மறைநூலுக்குத் திரிபிடகம் என்று பெயர். இது வினயபிடகம், சுத்தபிடகம், அபிதம்மபிடகம் என்ற மூன்று உட்பிரிவுகளைக் கொண்டது.
- மணிமேகலையும் குண்டலகேசியும் பௌத்த நூல்கள்.
- சமண முனிவர்கள் இயற்றியவை – சிலப்பதிகாரம், நன்னூல் (இலக்கணம்), சீவசிந்தாமணி, வளையாபதி (இலக்கியம்).
- சமணர்களின் புனித நூல்கள் – அங்கங்கள், பூர்வங்கள் என்பனவாகும்.
- வட்டக் காமினி அபயன் என்னும் அரசன் காலத்தில்தான் திரிபிடகம் முதன்முதலில் நூல் வடிவில் எழுதப்பட்டது என்று மகாவம்சம் என்னும் இலங்கை நூல் கூறுகிறது.
- பாலி மொழியில், இதனை "திரிபிடகம்" என்பர். இதற்கு மூன்று கூடை என்பது பொருள்.
- நன்றாகக் கட்டப்பட்ட வீட்டில் மழைநீர் நுழைவதில்லை. நற்சிந்தனை படைத்தவர் உள்ளத்தில் தீய ஆசைகள் நுழைவதில்லை – புத்தர்.
- நம் நாட்டுத் தேசியச் சின்னமான நான்கு சிங்கங்கள் செதுக்கிய உருவம், அசோகரது தூண்களின் முகப்பிலிருந்து எடுக்கப்பட்டது.
- நமது தேசியக் கொடியில் காணப்படும் 24 ஆரங்களைக் கொண்ட சக்கரம், அசோகரின் தூண்களில் காணப்படும் 'தர்ம சக்கரம்' ஆகும்.

## வரலாறு - பகுதி 7

## 6. மகா ஜனபதங்கள்

- வேத காலத்தின் இறுதியில் புதிய வளமான விளைச்சல் நிலங்களுக்காகவும் கனிம வளங்களுக்காகவும் சிறுசிறு ஆரிய அரசுகளான ஜனபதங்கள் தங்களுக்குள் போரிட்டுக் கொண்டன. அதே நோக்கத்திற்காகக் கிழக்கு நோக்கி முன்னேறவும் முற்பட்டனர். இதனால் கங்கைச் சமவெளியின் கிழக்கிலும், தெற்கிலும் இருந்துவந்த ஆரியரல்லாத இனப்பிரிவுகளுடன் மோதல்கள் ஏற்பட்டன. இப்போராட்டங்களினால் சிறிய ஜனபதங்கள் போர்களில் தோற்கடிக்கப்பட்டதாலோ, தாமாகவே முன்வந்ததாலோ பெரும் மகாஜனபதங்களாக இணைந்தன.
- பல ஜனபதங்களை உள்ளடக்கிய பெரிய அமைப்பாக 'மகாஜனபதங்கள்' உருவாக்கப்பட்டன. இனக்குழு அமைப்பை விட மேம்பட்டு பரந்து விரிந்த அரசுகளாக மகாஜனபதங்கள் இருந்தன.
- புத்தர் வாழ்ந்த காலத்தில் வட இந்தியாவில் 16 மகாஜனபதங்கள் மேலோங்கி இருந்தன. இவற்றில் சில பரம்பரை அரசர்களால் ஆளப்பட்டன. வேறு சில தேர்ந்தெடுக்கப்பட்ட அரசர் குழுக்களால் ஆளப்பட்டன.
- வைசாலி நகரைத் தலைநகராகக் கொண்ட வஞ்ஞிக் கூட்டாட்சியில் 18 குழுக்கள் இணைந்திருந்தன.

- கோசலம், அவந்தி, வத்சம், மகதம் போன்றவை பரம்பரை மன்னராட்சி மகாஜனபதங்களில் வலிமையானவை. இவை தங்களுக்குள்ளும், பிற குடியரசுகளுடனும் போரிட்டுக் கொண்டிருந்தன. மகதம் பிற மகாஜனபதங்களை வென்று இறுதியில் பேரரசாக எழுச்சி பெற்றது.

**மகாஜனபதங்கள்**

- அங்கம், மகதம், கோசல, காசி, வஜ்ஜி, வத்சம், குரு, பாஞ்சாலம், மத்ஸ்யம், சூரசேனம், அஸ்மகம், அவந்தி, காந்தாரம், காம்போஜம்.

**மகதத்தின் எழுச்சி**

**பிம்பிசாரர் (கி.மு. 525 – கி.மு. 500)**

- இன்றுள்ள பீகார் மாநிலத்தின் பாட்னாவைச் சுற்றியுள்ள பகுதி மகதம் என்று அழைக்கப்பட்டது. அதன் தலைநகராக முதலில், 'சிராவஸ்தி' நகரமும், பின்னர், 'இராஜகிருகம்' எனும் நகரமும், இறுதியாகப் 'பாடலிபுத்திரம்' என்னும் நகரமும் இருந்தன.
- அரியங்க வம்சத்தைச் சேர்ந்த பிம்பிசாரர். மிகச்சிறிய அரசாக இருந்த மகதத்தைப் படையெடுப்புகள் மூலமும், திருமண உறவுகள் மூலமும் விரிவுபடுத்தி வலிமையான ஓர் அரசாக மாற்றினார்.
- கயாவிற்கு அருகில் கிரிவ்ராஜாவை தலைநகராகக் கொண்டு அர்யங்க மரபு மகதநாட்டை ஆண்டது.
- கோசல நாட்டு இளவரசி கோசல தேவியை மணந்து கசியை சீதனமாகப் பெற்றார். மேலும் வைசாலி, விதேகம், மதுரா ஆகிய நாடுகளின் இளவரசிகளையும் மணந்தார்.
- அங்க நாட்டு அரசர் பிரம்மதத்தரை போரில் வென்று அங்க தேசத்தை இணைத்தார். மாளவம், காந்தாரம் போன்ற நாடுகளுடன் நட்புறவு கொண்டார்.
- சமணரான பிம்பிசாரர் அதன் வளர்ச்சிக்கு உதவினார்.
- அக்மேனியப் பேரரசர் முதலாம் டேனியசு சிந்து சமவெளியை வெற்றிகொண்டது இவரது ஆட்சிக்காலத்தில்தான்.

**அஜாத சத்ரு(கி.மு. 500 – கி.மு. 475)**

- பிம்பிசாரரின் மகன் அஜாதசத்ரு தனது தந்தையையே சிறையில் அடைத்து ஆட்சியைக் கைப்பற்றினார்.
- இவர் கோசலம், அவந்தி, வைசாலி ஆகிய மகாஜனபதங்கலுடன் நீண்டகாலம் போர் செய்து வெற்றிபெற்று மகதத்துடன் இணைத்தார்.
- பாடலிபுத்திரத்தில் பெரிய கோட்டையை அமைத்தவர் அஜாதசத்ரு.
- இவரது ஆட்சிக்காலத்தில் மகதப் பேரரசு புகழின் உச்சிக்கு சென்றது.
- முதல் புத்த சமய மாநாட்டினை ராஜகிருகத்தில் கூட்டினார்.
- இதற்கு அடுத்ததாக சிசுநாக மரபு ஆட்சியை கைப்பற்றியது.

**சிசுநாகர்**

- அரியங்க வம்சத்தை வீழ்த்தி, சிசுநாகர் ஆட்சியைப் பிடித்தார். சிசுநாகர்களுக்குப் பின் நந்த வம்சத்தினர் ஆட்சிக்கு வந்தனர்.

**நந்த மரபு ( கி.மு. 425 – கி.மு. 325)**

**மகாபத்ம நந்தன்**

- மகாபத்ம நந்தன் என்ற முதல் நந்த மன்னர் விந்திய மலைகளைக் கடந்து தக்காணப் பகுதிகளையும் கைப்பற்றினார்.
- இவர் சிந்து நதி முதல் தக்காணம் வரையில் பரந்து விரிந்த முதல் இந்தியப் பேரரசாக மகதத்தை உருவாக்கினார்.
- சமூகத்தின் கடைசி நிலையில் வைக்கப்பட்டிருந்த சூத்திரர்களான சிசுநாகரும், மகாபதநந்தனும் மன்னர்களாக அடுத்தடுத்து முடி சூடினார். இது ஒரு பெரும்புரட்சி.
- இவர்கள் மகதத்தின் ஆட்சியை வட இந்தியா முழுவதும் பரப்பினர்.
- நந்த வம்சத்துப் பேரரசர்கள் சமண மதத்தைப் போற்றினர்.
- பாஞ்சாலம், காசி, அசுமகம், குரு, மிதிலை, சூர சேனை போன்ற நாடுகளை வென்றார்.
- வட இந்தியா முழுவதையும் தனது ஆட்சியின் கீழ் கொண்டுவந்தார்.
- நந்தமரபின் கடைசி அரசர் தனநந்தர்.
- நந்தர்கள் கடவுள் நம்பிக்கையற்றவர்கள்.
- சாணக்கியர் தனநந்தரிடம் மந்திரியாக இருந்தார்.
- அவமானப்பட்ட சாணக்கியர் சந்திரகுப்தரை தட்சசீலத்திற்கு அழைத்துச் சென்று பயிற்சி கொடுத்து பின் தனநந்தரை வெற்றிகொண்டு மௌரியப் பேரரசை நிறுவினார்.

**அலெக்சாண்டரின் இந்திய படையெடுப்பு**

- கி.மு. 6 ம் நூற்றாண்டில் வட இந்தியாவில் பல முடியரசு நாடுகளும், குடியரசு நாடுகளும் இருந்தன. அவைகளில் 16 நாடுகள் மகாஜனபதங்கள் எனப்பட்டன. அதில் அங்கம், காசி, கோசலம், அவந்தி, வத்சம், மகதம் போன்றவை முக்கியமான நாடுகள் அதில் மகதம் பகுதியை ஆண்ட பிம்பிசாரரும், அஜாதசத்ருவும் அந்நாட்டை வலிமையான நாடாக மாற்றினர்.
- கிரேக்க நாட்டைச் சேர்ந்த மாசிடேனியானை ஆண்ட பிலிப்பின் மகனான அலெக்ஸாண்டர் அரிஸ்டாடிலின் மாணவர்.
- தனநந்தர் காலத்தில் இந்தியாவின் மேற்குப்பகுதி வழியாகப் படையெடுத்த அலெக்சாண்டர் இந்தியாவில் 19 மாதங்களே தங்கினார்.
- நெடும் பயணத்தின் காரணமாக, வீரர்கள் களைப்புற்றதாலும் நந்தர்களின் போர்த் திறத்தை அறிந்ததாலும் திரும்பிச் சென்றார்.
- எர்குலசைப் போல் சிறந்த வலிமையுள்ள வீரனாக விளங்கவேண்டுமென விரும்பினார்.

- கி.மு. 335 ல் அரியணை ஏறிய அலெக்சாண்டருக்கு வயது 20.
- கி.மு. 334 முதல் கி.மு. 330 வரை ஆசியா மைனர், சிரியா, எகிப்து போன்ற நாடுகளை தோற்கடித்தார்.
- கி.மு. 328 பாரசீகத்திலுள்ள எல்லா பிரதேசங்களையும், தற்போதைய ஆப்கானித்தானத்தையும் வெற்றிகொண்டு பாரசீகத்தின் மகா மன்னர் என்ற பட்டம் வென்றார்.
- இந்துகுஷ் மலை வழியாக சிந்து நதியைக் கடந்து வந்த அலெக்சாண்டரின் தலைமையை தட்சசீலத்தின் மன்னன் அம்பி ஏற்றார்.
- அலெக்சாண்டரை எதிர்த்த முதல் இந்திய மன்னர் போரசு ஜீலம் பகுதியை ஆண்டவர். இருவரும் ஜீலம் ஆற்றுக் கரைகளில் ஐடாஸ்பெஸ் என்னுமிடத்தில் கி.மு. 326 ம் ஆண்டு எதிர் கொண்டனர்.
- போரில் போரசு தோற்றாலும் ஒரு அரசனைப் போல் நடத்த வேண்டும் என்ற போரசின் துணிச்சல் அலெக்சாண்டரை கவர ஜீலம் பகுதியை அவருக்கே திருப்பித் தந்தார்.
- சீனாப் நதியையும் கடந்து காந்தர்களையும், சங்களர்களையும் வெற்றி கொண்டார்.
- பியாஸ் ஆற்றங்கரையை அடைந்து சோர்ந்து போனதால் திரும்பினார்.
- தான் கைப்பற்றிய பகுதிகளை மூன்றாக பிரித்து, அதில் ஒன்றான இந்தியாவின் வடமேற்குப் பகுதி செல்யூகஸ் நிகேடர் என்பவரிடம் கொடுக்கப்பட்டது. (பின்பு சந்திரகுப்த மௌரியரால் செல்யூகஸ் நிகேடர் தோற்கடிக்கப்பட்டார்)
- கி.மு. 323 ல் பாக்தாத்திற்கு அருகில் பாபிலோன் என்னுமிடத்தில் தனது 33வது வயதில் மரணமடைந்தார்.
- நியர்ச்சசு என்பவர் அலெக்சாண்டரின் நண்பர்.

## வரலாறு - பகுதி 7

## 7] மௌரியப் பேரரசு

1) நந்தமன்னனான தனநந்தனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து. போரில் வென்று மகதப்பேரரசை மௌரிய வம்சத்தைச் சேர்ந்த சந்திரகுப்தர் கைப்பற்றி ஆண்டார்.

2) சாணக்கியர் எழுதிய அர்த்தசாஸ்திரம் கிரேக்க தூதர் மெகஸ்தனிசு எழுதிய இண்டிகா, விசாகதத்தர் எழுதிய முத்திரா இராட்சசம் ஆகியவை மௌரியப் பேரரசு பற்றி கூறுகின்றன.

3) அலெக்ஸாண்டர் தலைமையில் கிரேக்கர்களால் முன்னர் கைப்பற்றப்பட்டிருந்த மேற்கிந்தியப் பகுதிகளை வென்று மௌரியப் பேரரசுடன் இணைத்தார். இதனை எதிர்த்துப் படையெடுத்து வந்த செலூகஸ் நிகேடார் என்ற கிரேக்க மன்னனையும், தோற்கடித்து ஆப்கானிஸ்தானம், காந்தாரம் போன்ற பகுதிகளையும் தமது பேரரசுடன் இணைத்துக் கொண்டார்.

4) செலூகஸின் தூதுவரான மெகஸ்தனிஸ் என்ற கிரேக்க அறிஞர் பாடலிபுத்திரத்தில் பல ஆண்டுகள் தங்கி, இந்தியாவைப்பற்றி, ' இண்டிகா ' என்னும் நூலை எழுதினார்.

5) சந்திரகுப்த மௌரியர் சமண மதத்தை தழுவித் துறவியாகி, அறியணையைத் துறந்து சமண முனிவர்

பத்திரபாகு என்பவருடன் தென் இந்தியாவிற்குச் சென்று விட்டார் என்று சமண சமய நூல்கள் கூறுகின்றன. அங்கு சரவணபெலகொலா பகுதியில் சமணமத நம்பிக்கையின்படி தவமிருந்து உயிர்நீத்தார் எனவும் கூறப்படுகிறது.

6) புத்த மத இலக்கியங்களான ஜாதகக் கதைகள், தீபவம்சம், மகாவம்சம் போன்றவை மௌரிய அரசை குறிப்பிடுகின்றன.

7) சந்திர குப்தரை மௌரியபுத்ரா என அழைத்தவர் விசாகதத்தர்.

8) தாயின் பெயரான முரா வின் திரிபுதான் மௌரியா என்றும், மோரியர் இனத்தவர் என்றும், மயில்(முரா) வளர்க்கும் தொழிலில் ஈடுபட்டவர் என்று கூறுகின்றனர்.

9) தனநந்தரைக் கொன்று பாடலிபுத்திரத்தை கைப்பற்றி அதை மௌரியர்களின் தலைநகராக்கினார்.

10) சாணக்கியரை கௌடில்யர் எனவும் அழைக்கின்றனர்.

11) சாணக்கியர் எழுதிய அர்த்த சாத்திரம் இத்தாலி நாட்டின் அரசியல் சிந்தனையாளர் மாக்கிய வள்ளிக்கு இணையாக கருதப்படுகிறார்.

12) சந்திரகுப்தர், பிந்துசாரர் ஆகியோரிடம் பிரதம மந்திரியாக சாணக்கியர் பணியாற்றினார்.

13) செல்யூகஸின் மகள் ஹெலனை மனம் முடித்தார்.

14) செல்யூகஸின் தூதுவரான மெகஸ்தனிசு சந்திரகுப்தரின் அரசவைக்கு வந்தார்.

15) அரச பதவியை துறந்த பத்ரபாகு என்ற சமணத் துறவியுடன் மைசூருக்கு அருகில் சரவணபெலகொலா வந்து தங்கினார்.

16) இறக்கும் வரை சந்திரகிரி என்னும் மலைப்பகுதியில் வசித்தார். அங்கு அவரின் நினைவாக சந்திரபாஸ்டி என்ற கோயில் ஒன்று உள்ளது.

17) சந்திர குப்தர் கி.மு.298ல் இறந்தார்.

**பிந்துசாரர் (கி.மு. 298 - கி.மு. 273)**

1) சந்திரகுப்தரின் மகனான இவர் அமித்ரகதா என்று அழைக்கப்பட்டார். அமித்ரகதா என்றால் எதிரிகளை அழிப்பவர் என்று பொருள்.

2) தனது மூத்த மகனான சுமணாவை தட்சசீலத்திற்கும், இளையமகன் அசோகரை உஜ்ஜயினிக்கும் அரசப்பிரதிநிதிகளாக நியமித்தார்.

3) கிரேக்க எகிப்திய நாட்டு மன்னர்கள் தங்கள் தூதர்களை இவரின் அவைக்கு அனுப்பினார்.

**அசோகர் (கி.மு. 273 -236)**

1) பிந்துசாரர் அவர்களின் மகன்களில் ஒருவரான அசோகர் மௌரியப்பேரரசானர். முதல் நான்கு ஆண்டுகள், அரசராவதை எதிர்த்து தனது சகோதரர்களின் கிளர்ச்சிகளை அடக்குவதில் செலவிட்டார்.

2) மௌரிய அரசர்களில் மிக சிறந்தவராக கருதப்பட்டார்.

3) முதல் தேசிய அரசராக விளங்கினார்.

**கலிங்கப் போர் (கி.மு. 261)**

1) கலிங்கம் தற்கால ஒரிசாவில் உள்ளது.

2) எட்டு ஆண்டுகள் கழித்து மௌரியப்பேரரசிலிருந்து பிரிந்து சென்ற கலிங்கத்தின் மீது படையெடுத்தார். கலிங்கத்து அரசர் சசாங்கன் அசோகரை எதிர்த்து போரிட்டார்.

3) கடும் போருக்குப்பின் கலிங்கத்தை மீண்டும் மௌரியப்பேரரசுடன் இணைத்தார். ஆனாலும், இப்போரில் அவர் கண்ட பேரழிவுக் காட்சிகள் அவரை மிகவும் கலங்கச் செய்தன. இனி போரிடுவதில்லை என்று உறுதி பூண்டார்.

4) அசோகர் அகிம்சை வழியில் மாற இப்போர் காரணமாக இருந்தது.

5) சிவனை வழிபட்ட அசோகர் கலிங்கத்துப் போருக்கு பின் புத்த சமயத்தை தழுவினார்.

6) எம்.ஜி வெல்ஸ் அசோகரின் பெயர் தனித்து ஒளிரும் விண்மீன் போல் பிரகாசிக்கிறது என்று போற்றுகிறார்.

**அசோகரின் தர்ம விஜயம்**

1) குடிமக்களுக்கு உதவுவதும், அவர்களை நன்னெறிப்படுத்துவதும் தான். அரசனின் கடமைகளாக இருக்க வேண்டும் என்று அசோகர் கூறினார். தமது எஞ்சிய வாழ்நாளை மக்களைச் சந்திப்பதிலும், அவர்களுக்கு உதவுவதிலும், அறிவுரைகளை கூறுவதிலும் கழித்தார்.

2) படையெடுத்துப் போர் செய்து, வெற்றி பெரும் 'திக் விஜயத்தை' வெறுத்தார். மக்களிடம் தர்மத்தை வளர்க்க இவர் மேற்கொண்ட இடைவிடாத பயணங்கள் 'தர்மவிஜயம்' என்று குறிப்பிடப்படுகின்றது.

3) சாதிமத பேதமின்றி அனைவருக்காகவும் சாத்திரங்களையும், மருத்துவமனைகளையும் காட்டினார், கால்நடைக்கும் மருத்துவமனைகள் ஆரம்பிக்கப்பட்டன.

4) உயிர்ப்பலியிடும் யாகச் சடங்குகள் தடை செய்யப்பட்டன.

5) தம்மா எனப்படும் தர்மத்தை (பிராகிருத சொல் ) போதித்தார்.

6) தண்டனை விதிகளில் மனிதாபிமானத்துடன் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. உயிர்வாதைகள் தடுக்கப்பட்டன.

7) கல்வெட்டுகளில் வட்டார மொழிகளிலே எழுதி, அசோகர் தமது 'தர்மத்தை' மக்களிடையே பரவச செய்தார்.

8) மக்களுக்கு உதவுவதற்காகவே, தர்மமகாமாத்திரர்கள் எனப்பட்ட சிறப்புப் பணியாளர்களை நியமித்தார். இந்தியாவில் முதன் முதலில் மக்கள் நல அரசை உருவாக்கிய சிறப்பு அசோகரையே சேரும்.

**அசோகரும் பௌத்தமும்**

1) அறிவு, அன்பு, ஒழுக்கம் ஆகியவற்றவை வலியுறுத்திய பௌத்த மதத்தை அசோகர் தழுவினார். ஆனாலும் பிராமணர், அஜுவகர் போன்ற பிற மதப்பிரிவினரிடமும் கருணையுடன் நடந்துகொண்டார்.

2) அசோகர் பௌத்தராக மாற காரணமாக இருந்தவர் திளை என்ற புத்த துறவி.

3) பௌத்த மதத்தைப் பரப்புவதற்குப் பல முயற்சிகளை மேற்கொண்டார். கபிலவஸ்து, சாரநாத், புத்தகயா போன்ற பௌத்த நினைவிடங்களை செப்பனிட்டு விரிவுபடுத்தினார்.

4) நூற்றுக்கணக்கான ஸ்தூபிகளையும், தூண்களையும் அமைத்தார்.

5) அசோகர் பாடலிபுத்திரத்தில் மூன்றாவது பௌத்த மாநாட்டைக் கூட்டினார்.

6) பௌத்த நெறியைப் பரப்புவதற்காகத் துறவியர் குழுக்களைப் பேரரசின் பல பகுதிகளுக்கும், வெளிநாடுகளுக்கும் அனுப்பினார்.

7) இலங்கையில் பௌத்த மதத்தைப் பரப்பத் தன் மகன் மகேந்திரனையும் மகள் சங்கமித்திரையையும் அனுப்பினார்.

8) புத்த மதத்தை பரப்ப மெசபடோமியா, சிரியா, எகிப்து, திபெத், சீன, பர்மா போன்ற நாடுகளுக்கு துறவிகளை அனுப்பினார்.

9) தன்னை தேவனாம்பிரியர் என்றும் பிரியதர்சன் என்றும் அழைத்துக் கொண்டார்.

10) அசோகரது முயற்சியால் பௌத்த மதம் ஓர் உலக மதமாக மலர்ந்தது.

11) அசோகரின் புத்த சமய பணிகள் ரோம் நாட்டின் பேரரசர் கான்ஸ்டன்டைன் கிருத்துவ சமயத்திற்கு ஆற்றிய பணிகளுக்கு சமமாக கருதப்படுகின்றன.

12) தனது போதனைகளை பரப்ப மக்கள் பேசிய பாலி மொழியை பயன்படுத்தினர்.

13) அசோகர், புத்தரின் நினைவாக ஸ்தூபங்களையும், விகாரங்களையும் காட்டினார். பின்னர் இது புத்த துறவிகள் தங்கும் மடாலயங்களாயின.

**அசோகரின் கலைப்பணிகள்**

1) சிந்துசமவெளி நாகரீகத்திற்குப் பிறகு இந்தியாவில் கிடைத்துள்ள மிகப்பழமையான நினைவுச் சின்னங்களும், கல்வெட்டுகளும், ஸ்தூபிகளும், கற்தூண்களும் அசோகர் காலத்தவை.

2) சாஞ்சி, சாரநாத், லும்பினி போன்ற இடங்களில் கலையழகு மிக்க பிரம்மாண்டமான பௌத்த தூபிகள் உள்ளன.

3) கால்சி, பைரத், ரூப்நாத், டௌலி, சோபாரா, கிர்னார் போன்ற இடங்களில் அசோகரின் கல்வெட்டுகள் உள்ளன.

4) ஜவ்கதா, சாரநாத், ராம்பூர்வா போன்ற இடங்களில் கற்தூண் கல்வெட்டுகள் உள்ளன.

5) அசோகரால் நிறுவப்பட்ட கற்தூண்களின் வடிவமைப்பும், அதன் முகப்பிற்குக் கீழ்க் காணப்படும், தாமரை மலரைத் தலைகீழாகக் கவிழ்ந்து வைத்தது போன்ற சிற்ப வேலைப்பாடும், பாரசீகச் சிற்பக்கலையின் தாக்கத்தால் வந்தவை.

**அசோகரது கல்வெட்டுகள்**

1) குகைகளின் சுவர்களிலும், கற்தூண்களிலும், கற்பாறைகளின் மீதும் அசோகரது ஆணைகள் மற்றும் அறிவுரைகள் பொறிக்கப்பட்டுப் பேரரசின் பல பகுதிகளிலும் வைக்கப்பட்டன.

2) பெரும்பாலான கல்வெட்டுகள் பிராகிருத மொழியில் எழுதப்பட்டவை.

3) வடமேற்கு எல்லைப் பகுதியில் கரோஸ்தி என்னும் எழுத்திலும், ஆப்கானிஸ்தான் பகுதிகளில் கிரேக்க எழுத்திலும் பொறிக்கப்பட்டுள்ளன.

4) அசோகரது போர் மறுப்பு, அறக்கொள்கை, மனிதநேயக் கருத்துக்கள் இக்கல்வெட்டுகளில் வெளிப்படுகின்றன.

**அசோகரின் கல்வெட்டுகள்**

"எட்டு ஆண்டுகள் போரிட்டேன், கலிங்கத்தை வென்றேன். அதில் ஒரு இலட்சம் பேர் மாண்டனர்; ஒன்றரை லட்சம் பேர் நாட்டைவிட்டு வெளியேறினர். அது எனக்கு மிகுந்த துயரத்தை அளித்தது. ஜனபதம் போரில் தோற்கடிக்கப்படும் பொது, இலட்சக் கணக்கான மக்கள் கொல்லப்படுகிறார்கள்; சிறைப்பிடிக்கப்படுகிறார்கள். முன்பு அன்புக்குரியவர்களாக இருந்தவர்களைப் போர் பிரிக்கிறது. போரின் கெடுதல்கள் அனைத்து மக்களையும் பாதிக்கின்றன. இது என்னை மிகவும் துன்புறுத்தியது. போரைவிடத் தர்மத்தைப் பின்பற்றுவதே சிறந்தது என்பதை ஏற்றுக் கொண்டேன்".

**- அசோகர்**

**மௌரியரின் ஆட்சி முறை**

1) மைய அரசு முறையில் ஆளப்பட்டது, அரசர் எல்லா அதிகாரங்களையும், படைத்தளபதியாகவும், நீதிபதியாகவும் திகழ்ந்தார்.

2) அசோகரது பேரரசு 5 பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது.

3) வடக்குப் பகுதிக்குத் தட்சசீலமும், மேற்குப் பகுதிக்கு உஜ்ஜயினியும், தெற்குப் பகுதிக்குச் சுவர்ணகிரியும், கிழக்குப் பகுதிக்குத் தோசாலியும் தலைநகரங்களாக இருந்தன.

4) பேரரசின் மையமான மகதம் போன்றவற்றைப் பேரரசரே பாடலிபுத்திரத்திலிருந்து ஆட்சி செய்தார்.

5) பேரரசு பல மாகாணங்களாகவும், மாவட்டங்களாகவும், கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன.

6) மாவட்டங்களை கவனித்தவர்கள் பிரதேசிகர் /ஸ்தானிகர் என்று அழைக்கப்பட்டனர்.

7) கிராமங்கள் கிராமினியர் என்ற கிராமத் தலைவர்களின் கீழ் செயல்பட்டன. கிராமங்களில் நீதி வழங்கும் அதிகாரிகள் ராசுகர்கள் எனப்பட்டனர்.

8) பேரரசருக்கு ஆலோசகர்களாக அமைச்சர்களும் நியமிக்கப்பட்டனர்.

9) சாதி, மதத் தடையின்றி அமைச்சர்களும் அதிகாரிகளும் நியமிக்கப்பட்டனர்.

10) மகாமாத்திரர் என்ற உயர் அதிகாரிகள் மாநிலங்களின் அதிகாரிகளாகவும் ஆளுநர்களாகவும் இருந்தனர். இளவரசர்களும் மகாமாத்திரர்களாக நியமிக்கப்பட்டனர்.

11) யுக்தர், பிரதேசிகர், தூதர், ஒற்றர் (பெண் ஒற்றர்களும்) போன்ற பிற அதிகாரிகளும் இருந்தனர்.

12) அரசரின் சுற்றுப்பயண முறையை அறிமுகப்படுத்தினார்.

13) எல்லைப்பகுதிப் பாதுகாப்பைக் கண்காணித்தோர் 'அந்த மகாமந்திரர்' எனப்பட்டனர்.

14) மக்களது அறவாழ்க்கைக்கு உதவ ஒழுக்க வாழ்க்கையை வாழவேண்டி மக்களை ஊக்குவித்து மேற்பார்வையிட அலுவலர்களாக தர்ம யுத்தரர்கள், தரும மகாமாத்திரர்கள் இருந்தனர்.

15) நகரங்களில் உள்ளாட்சி அமைப்புகள் இருந்தன. பாடலிபுத்திரத்தை 30 பேர் கொண்ட நகரமன்றம் ஆட்சி செய்ததாக மெகஸ்தனிஸ் எழுதிய இண்டிகா என்ற நூல் கூறுகிறது. இவர்கள் 5 பேர் கொண்ட 6 குழுக்களாக பிரிந்து, ஒவ்வொரு குழுவினரும் ஒரு குறிப்பிட்ட பொறுப்பினை ஏற்று ஆட்சி செய்தனர்.

16) மௌரியரது வலிமையான படை 30 பேர் கொண்ட நிருவாகக் குழுவால் கண்காணிக்கப்பட்டது.

17) காலாட்படை , குதிரைப்படை, யானைப்படை, தேர்ப்படை, கப்பற்படை போன்ற 5 பிரிவுகளை குழுவின் 5 உட்குழுக்கள் நிருவாகம் செய்தன. ஆறாவது உட்குழு இப்படைகளுக்கான போக்குவரத்து, உணவு,

மருத்துவ வசதி, தளவாடங்கள் போன்றவற்றை ஏற்பாடு செய்தது.

18) மௌரியர்களின் படையில் 6,00,000 காலாட்படை வீரர்களும், 3,00,000 குதிரைகளும், 9000 யானைகளும் இருந்ததாக பிளினி என்ற ரொமானிய எழுத்தாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.

19) மௌரியர்களின் நீதி நிருவாகம் முதலில் மிகக் கடுமையானதாக இருந்தது. அசோகர் இதில் மனித நேயத்துடன் சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தார் சித்திரவதை ஒழிக்கப்பட்டது. மரண தண்டனை கைதிகளுக்கு ஆறுதலளிக்கும் விதமாகப் புதிய நடைமுறைகளை கொண்டு வந்தார். சிறிய குற்றங்களுக்கான தண்டனை காலத்தை குறைத்தார்.

20) அரசரும், அதிகாரிகளும் தொடர்ந்து பயணம் செய்து மக்களது குறைகளை நீக்குவதற்குப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

21) பட்டத்து இளவரசர்கள் யுவராஜா என்றும், மந்திரிகள் குழாம் மந்திரின் என்றும் அழைக்கப்பட்டனர்.

22) நிலவரி முதன்மையானது.

23) அரசு ஊழியர்கள் ஊதியத்தைப் பணமாகப் பெற்றனர்.

24) நாணயங்கள் வெள்ளியினால் செய்யப்பட்டும் துளையிடப்பட்டும் இருந்தன. எனவே துளையிடப்பட்ட நாணயங்கள் என அழைக்கப்பட்டன. இது கர்ச பணம் என்று அழைக்கப்பட்டன.

25) இந்தியாவின் தென்கோடிப்பகுதியைத் தவிர அனைத்து பகுதிகளும் மௌரியரின் கீழ் இருந்தன.

26) அசோகரின் கல்வெட்டுகளில் சேரமக்களை கேரளபுத்திரர்கள் என்று உள்ளது.

27) மௌரிய வம்சத்தின் கடைசி அரசர் பிருகத்திரதன் தன் படைத்தலைவர் புஷ்யமித்ர சங்கர் என்பவரால் படுகொலை செய்யப்பட்டார். இதற்குப்பின் ஏறக்குறைய 500 ஆண்டுகள் மகதம் வலுவிழந்து நின்றது.

**கலை**

1) சாரநாத் கற்தூண் - தர்ம சக்கரத்தில் 24 ஆரங்கள் உள்ளது. இவற்றில் சிங்கம், குதிரை, எருது, மற்றும் யானை உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளது.

2) சாஞ்சி ஸ்தூபி 23 மீட்டர் உயரமுள்ளது.

## வரலாறு - பகுதி 8, 9

## 8] சுங்கர்கள்

## பாடக்குறிப்புகள்

### புஷ்யமித்ர சுங்கர்

1) தோற்றுவித்தவர் புஷ்யமித்ர சுங்கர் ஆவார். கி.மு 185ல் மகதத்தின் அரசரானார்.

2) சுங்கர்கள் 112 வருடங்கள் ஆட்சி செய்தனர்.

3) புஷ்யமித்ரர் இந்து சமயத்தைப் பின்பற்றினார்.

4) இவரின் தென் எல்லை நர்மதை ஆறு.

5) அசுவமேதையாகம் நடத்தி மகாராஜாதிராஜா என்ற பட்டத்தைப் பெற்றார்.

6) சமஸ்கிருத மொழி இலக்கண வல்லுநர் பதஞ்சலி, புஷ்யமித்ரர் காலத்தைச் சேர்ந்தவர்.

7) இவரின் மகன் அக்னிமித்திரன், இவர் காளிதாசர் எழுதிய மாளவிகாக்கினிமித்திரம் நாடகத்தின் கதாநாயகன்.

8) கடைசி சுங்க மன்னன் தேவபூபதியை அவருடைய மந்திரி வாசுதேவ கன்வா கொன்றார். அதற்குப் பின் கன்வர்களின் ஆட்சி தொடங்கியது.

9) மௌரியரின் வீழ்ச்சிக்குப் பிறகு வடமேற்கு இந்தியா முழுவதும் கி.மு. 200 முதல் கி.மு 100 வரை அந்நியர்கள் ஆண்டனர்.

10) பார்த்தினியர்கள், சாகர்கள், குஷாணர்கள் போன்றோர் மத்திய ஆசியாவிலிருந்து வந்தவர்கள்.

## 9] குஷாணப் பேரரசு

1) மௌரியர்கள் வீழ்ச்சிக்குப் பின் இந்தியாவில் நிறுவப்பட்ட வலிமையான பேரரசு குஷாணப் பேரரசு ஆகும்.

2) சீனாவில் யூச்சி என்ற இனக்குழுவின் ஓர் உட்பிரிவினரே குஷாணர்கள்.

3) இந்தியாவின் வடமேற்கு பகுதியில் குஷாண அரசை முதலாம் காட்பிஸஸ் கி.பி. முதல் நூற்றாண்டில் நிறுவினார். இவருக்குப் பின் வந்த இரண்டாம் காட்பிஸஸ் (கி.பி. 65-75) பஞ்சாபையும், கங்கைச் சமவெளிகளையும் கைப்பற்றினார்.

4) குஜலா காட்பிச்சு என்ற யூச்சி இனத்தலைவர் காபூலையும், காஷ்மீரையும் கைப்பற்றி குஷாண மரபைத் தோற்றுவித்தார்.

5) குஜலா காட்பிசசுவின் மகன் வீமா காட்பிசசு புகழ் பெற்றவர்.

### கனிஷ்கர் (கி.பி. 78 - 101)

1) இரண்டாம் காட்பிஸஸ் இறந்தபின் கனிஷ்கர் குஷாண அரியணையைக் கைப்பற்றினார்.

2) மாளவத்தை ஆண்ட சாகர்களையும், குஜராத் மன்னரையும் வெற்றி கொண்டார்.

3) கனிஷ்கர் குஷாண வம்சத்தின் தலை சிறந்த மன்னராக விளங்கினார். இவர் கிழக்கில் பாடலிபுத்திரம் வரை படை எடுத்தார்.

4) சாக சத்திரபர்களை அடிபணிய வைத்தார். சீனாவின் மீது இருமுறை படையெடுத்தார்.

5) முதல் போரில் புகழ்பெற்ற சீன தளபதி பாஞ்சோ என்பவனிடம் தோல்வியுற்றார். ஆயினும் இரண்டாவது போரில் வெற்றி பெற்றார்.

6) பாமிர் முடிச்சை கடந்து சீனர்களை வென்று காஷ்கர், யார்கண்ட், கோடான் ஆகிய மத்திய ஆசியப் பகுதிகளைத் தன் பேரரசுடன் இணைத்தார்.

7) புருஷபுரம் என்ற பெஷாவரைப் புது நகராக உருவாக்கித் தன் தலைநகராக ஆக்கினார்.

8) மகத மன்னரை வென்று யுத்த தத்துவ ஞானியாக அசுவகோசரை தன்னுடன் அழைத்துச் சென்றார்.

9) அசுவகோசரின் போதனைகளால் புத்த மதத்தை தழுவினார்.

10) நான்காவது பௌத்த மாநாட்டைக் காஷ்மீரில் உள்ள குந்தல்வனம் என்ற இடத்தில கூட்டினார். பௌத்த அறிஞர்களான வசுபந்து, நாகார்ஜுனர் போன்றோர் பங்கு பெற்ற அம்மாநாட்டிற்கு அசுவகோசர் தலைமை தாங்கினார். இம்மாநாட்டில் தான் மகாயான பௌத்த மத பிரிவு தோன்றியது.

11) கனிஷ்கர் மகாயான புத்த சமயத்தை ஆதரித்தார்.

12) மகாயான புத்த சமயத்தின் அறிஞர்கள் அசுவகோசர் மற்றும் நாகார்ஜுனர்.

13) மகாயான பௌத்த மதத்தை பரப்புவதற்காகத் துறவியர் குழுக்கள் திபெத், சீனா, ஜப்பான், மத்திய ஆசியா போன்ற நாடுகளுக்கு அனுப்பப்பட்டன.

14) பௌத்த மதத்தின் மீது அவருக்கு இருந்த ஈடுபட்டாலும், பௌத்த மதத்தை பரப்ப மேற்கொண்ட முயற்சிகளாலும் இவர் இரண்டாம் அசோகர் என்று அழைக்கப்பட்டார்.

15) கனிஷ்கர் பதவிக்கு வந்த ஆண்டினை முதன்மையாக வைத்துச் சக சகாப்தம் என்னும் புதிய காலக்கணக்கீட்டு முறை உருவாயிற்று.

16) கனிஷ்கர் இறுதியில் அவரது கூடாரத்திலேயே சாதிக்காரர்களால் கொலை செய்யப்பட்டார். இவருக்குப்பின், குஷாணப் பேரரசு வீழ்ச்சி அடைந்தது.

## கலை

1) மகாயான பௌத்த அறிஞரான அசுவகோஷரால் வடமொழியில் புத்தசரிதம், சூத்திராலங்காரம் போன்ற நூல்கள் இயற்றப்பட்டன.

2) வசுமித்ரர் மகாவிபாசா என்ற சாத்திர நூலை தொகுத்தார். நாகார்ஜுனர் எழுதிய தத்துவ நூல் மத்திய மிகா சூத்ரம்.

3) மருத்துவ அறிஞர் சரகரும், கிரேக்கக் கட்டடக்கலை வல்லுநர் ஏஜிலாஸும் கனிஷ்கர் அரசவையில் இடம்பெற்றனர்.

4) இந்திய கிரேக்க நுட்பங்கள் இணைந்த காந்தாரக் கலையினால் பௌத்தத்துடன் தொடர்புடையோரின் புதிய சிற்பங்கள் உருவாக்கப்பட்டன.

5) சரகர் என்ற மருத்துவர் கனிஷ்கரால் ஆதரிக்கப்பட்டார். சரகர் எழுதிய நூல் சரக சமிதம் ஆகும்.

6) சுசுருத சமிதம் என்னும் நூலை எழுதிய சுசுருதர் கனிஷ்கர் காலத்தை சார்ந்தவர். இந்நூல் அறுவை சிகிச்சைபற்றி குறிப்பிடுகிறது.

7) காந்தார சிற்பக்கலை என்ற புதிய பரிமாணம் தோன்ற காரணம் கனிஷ்கர்.

8) கி.பி. 180 ஆம் ஆண்டு கனிஷ்கரின் பேரரசு வீழ்ந்தது.

## வரலாறு - பகுதி 10

## 10] குப்தப்பேரரசு

### குப்தப்பேரரசு

1) குஷாணப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு, மகதத்தில் பாடலிபுத்திரத்தை தலைநகராக கொண்டு உருவான பேரரசு, குப்தப் பேரரசு ஆகும்.

### ஸ்ரீகுப்தர்

1) கி.பி. 4 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஸ்ரீகுப்தர் என்பவர் பாடலிபுத்திரத்தில் சிறிய அரசு ஏற்படுத்தி குப்த மரபை தோற்றுவித்தார்.

2) குப்தர்கள் 200 ஆண்டுகள் வட இந்தியாவை ஆண்டார்கள்.

3) இவர்களின் காலத்தில் அரசியல் ஒற்றுமை, பொருளாதார வளர்ச்சி என எல்லா நிலைகளிலும் முன்னேற்றம் ஏற்பட்டன, எனவே குப்தர்களின் காலம் பொற்காலம் எனக் கருதப்பட்டது.

### குப்தர்களின் வரலாற்றை அறிய உதவும் சான்றுகள்

1) பதினெட்டு புராணங்கள், சீனப்பயணி பாகியான் குறிப்புகள், விசாகதத்தர் எழுதிய முத்ர ராட்சசம், காளிதாசர் எழுதிய இலக்கியங்கள், பாணர் எழுதிய ஹர்ஷ சரிதம், சமுத்திர குப்தரின் அலகாபாத் கல்தூண்.

### முதலாம் சந்திரகுப்தர் (கி.பி 319-335)

1) குப்த வம்சத்தின் முதல் சுதந்திர மன்னராக முதலாம் சந்திரகுப்தர் குறிப்பிடப்படுகிறார்.

2) இவரது ஆட்சியின் தொடக்கத்தை குறிக்கும் வகையில் குப்தயுகம்/ சகாப்தம் என்ற கால கணக்கீடு புகுத்தப்பட்டது.

3) லிச்சாவியின் இளவரசி குமாரதேவியை மணந்தார்.

4) இந்திய நாணயத்தில் உருவம் பொறிக்கப்பட்ட முதல் இந்திய அரசி லிச்சாவி இளவரசி குமார தேவி.

### சமுத்திர குப்தர் (கி.பி. 335-375)

1) இவர் முதலாம் சந்திரகுப்தரின் மகன்

2) வங்காளத்திலிருந்து சிந்து நதி வரையிலும் இமையமலையிலிருந்து விந்தியமலை வரையிலும் இப்பேரரசு விரிவாக்கப்பட்டது.

3) 9 வட இந்திய அரசர்களையும், 11 குடியரசு குழுக்களையும், 12 தென்னிந்திய அரசர்களையும் போர்களில் வென்றது என சமுத்திர குப்தரது படையெடுப்பு வெற்றிகளைப்பற்றி அலகாபாத் கல்வெட்டு விரிவாக குறிப்பிடுகிறது.

4) அலகாபாத் கல்வெட்டைப் பொறித்தவர் இவரது அமைச்சர் (படைத்தளபதி) அரிசேனர்.

5) விந்தியமலைப் பகுதியில் அமைந்த அடவிகா ராஜ்யத்தை வென்றார்.

6) காஞ்சிபுரத்தை ஆண்ட பல்லவ மன்னன் விஷ்ணு கோபனைச் சிறைபிடித்தார்.

7) திக்விஜயம், தர்மவிஜயம் முடித்து அசுவமேத யாகம் நடத்தினார்.

8) இந்திய நெப்போலியன் என்று ஸ்மித் என்பவரால் புகழப்பட்டார்.

9) இசையில் ஆர்வம் கொண்ட இவரது நாணயத்தில் இவர் வீணை வாசிப்பது போல பொறிக்கப்பட்டுள்ளது.

### இரண்டாம் சந்திரகுப்தர் (கி.பி. 380-414)

1) சமுத்திரகுப்தரின் மகனான இரண்டாம் சந்திரகுப்தர் புகழ் பெற்ற அரசராகப் போற்றப்படுகிறார் .

2) நாகர் குல இளவரசி குபேரநாகாவை மணந்தார்.

3) தன் மகள் பிரபாவதியை வாகாடக அரசர் இரண்டாம் ருத்ரசேனருக்கு மணமுடித்துக் கொடுத்தார்.

4) அந்நியப்படையெடுப்பாளர்களான சாகர்களை வென்று குஜராத்தையும் சௌராஷ்டிராவையும் கைப்பற்றியதில் இவர் சாகரி என்ற பெயரால் அழைக்கப்பட்டார்.

5) உஜ்ஜயினி நகரைக் கைபற்றிக் கொண்டார். இவரது இரண்டாவது தலைநகர் உஜ்ஜயினி.

6) விக்ரமாதித்யன் என்ற பட்டப் பெயரால் அழைக்கப்பட்டார்.

7) விக்ரமாதித்யன் என்றால் வலிமையிலும் வீரத்திலும் சூரியனுக்கு ஒப்பானவர்.

8) நவரத்தினங்கள் என்றழைக்கப்பட்ட 9 அறிஞர்களை இரண்டாம் சந்திரகுப்தரின் அவையில் இருந்தனர்.

9) நவரத்தினங்களுள் காளிதாசர் முதன்மையானவர் மருத்துவ வல்லுனர் தன்வந்திரி, வானநூல் அறிஞர் வராகமித்ரர், அகராதி தொகுத்த அமரசிம்மர் ஆகியோரும் அடங்குவர்.

10) காளிதாசரின் நாடக நூல்கள்: சாகுந்தலம், மாளவிகாக்கினி, மித்ரம், விக்கிரம ஊர்வசியம் ஆகும். இதனால் இவர் இந்திய சேக்ஸ்பியர் என்றழைக்கப்பட்டார்.

11) காளிதாசர், அமரசிம்மன் இவரது அவைப் புலவர்கள்.

12) புகழ்பெற்ற சீனப் பயணி பாகியான், இரண்டாம் சந்திரகுப்தர் காலத்தில் இந்தியாவின் பௌத்தத் தளங்களை காண வந்தார்.

### குமார குப்தர் (கி.பி. 414 - 455)

1) இரண்டாம் சந்திரகுப்தரின் மகனான குமார குப்தர் காலத்தில், பௌத்தர்களது புகழ்பெற்ற நாளந்தா பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது.

### ஸ்கந்த குப்தர் (கி.பி. 455-467)

1) கி.பி. 456 முதல் கி.பி. 468 வரை ஆட்சி செய்த ஸ்கந்தகுப்தர் காலத்தில் குப்த அரசுக்கு யூணர்களால் ஆபத்து ஏற்பட்டது.

### இலக்கியங்கள்

1) குமார சம்பவம், மேகதூதும், இரகுவம்சம் ஆகிய இலக்கியங்களை இயற்றியவர் காளிதாசர் ஆவார்.

2) இராமாயணம், மகாபாரதம் போன்றவையும், 18 புராணங்களும் தொகுக்கப்பட்டன.

3) பஞ்சதந்திரக் கதைகள் இயற்றப்பட்டன. பஞ்சதந்திர கதைகளை எழுதியவர் விஷ்ணுசர்மா.

4) சமஸ்கிருத மொழியில் புலமை பெற்றவர்கள் இவர்களால் போற்றப்பட்டனர். காளிதாசர் - பாணர் - விசாகதத்தர் போன்ற புகழ்பெற்ற வடமொழிப் புலவர்கள் குப்தர்களால் போற்றப்பட்டனர்.

5) மிருச்சகடிகம் என்னும் நாடக நூலை எழுதியவர் சூத்ரகர்.

6) முத்ரா இராட்சசம் என்னும் நூலை எழுதியவர் விசாகதத்தர்.

7) வராகபட்டர் பூமி வட்ட வடிவமானது, அது சூரியனைச் சுற்றி வருகிறது என்று கூறினார்.

8) வானியல், கணித அறிஞர் வராகப்பட்டர் எழுதிய ஆரியபட்டீயம் என்னும் நூலில் தசமும், பூஜ்ஜியம், கனமூலம், வர்க்கமூலம் போன்றவற்றை விளக்கியுள்ளார்.

9) வராகமித்ரா எழுதிய நூல் சோதிட சாஸ்திரம், மற்றும் பிருகத் சம்கிதம் ஆகியவை.

10) பிரம்மகுப்தர் எழுதிய பிரும்ம சித்தாந்தம் எனும் நூலில் புவி ஈர்ப்பு விசையைப் பற்றி குறிப்பிட்டுள்ளது.

### குப்தர் கால சமூகம்

1] உயர்குடியில் பிறந்த பெண்களும் அரசு நிர்வாகத்தில் பங்கு கொண்டனர்.

2] சுயம்வரம் முறை இருந்தது.

3] ஆரியப்பட்டர் - வராகமித்திரர் போன்ற புகழ்பெற்ற கணித - வானியல் அறிஞர்களும், சரகர், சுஸ்ருதர், தன்வந்திரி முதலிய மருத்துவ அறிஞர்களும் குப்தர் காலத்தவர்கள்.

4] சமூக அமைப்பில் சாதிமுறை மிகக் கடுமையாயிற்று.

5] அசோகர் காலத்திலிருந்து புறக்கணிக்கப்பட்டிருந்த உயிர்பலி, வேள்விகளுக்குப் புத்துயிர் அளிக்கப்பட்டது.

6] சிவன் - சக்தி - விஷ்ணு - குமரன் (முருகன்) வழிபாடுகள் பெருகின.

7] இந்துக் கோயில்கள், சூரியக் கடவுளுக்குத் தனி கோயில்கள் கட்டப்பட்டன.

### கலை

1] 1500 ஆண்டுகளாய்த் துருப்பிடிக்காமல் பொலிவுடன் இருக்கும் மெகரௌலி இரும்புத்தூண் குப்தர் காலத்ததாகும்.

2] விஷ்ணு, சிவன், துர்க்கை போன்ற இந்துக் கடவுளுக்குச் சிறுசிறு கோயில்கள் கட்டப்பட்டன.

3] விஷ்ணுவிற்கு கோவில் உள்ள இடங்கள், தியோகர், பித்தார்கன் (ஜான்பூர்)

4] அஜந்தாவிலுள்ள சில பௌத்த குகைச் சிற்பங்களும், ஓவியங்களும் குப்தர் காலத்தவை.

5] எல்லோரா குகை ஓவியங்கள் குப்தர் காலத்தைச் சேர்ந்தவை.

6] நாளந்தா, தட்சசீலம், உஜ்ஜயினி, சாரநாத், விக்கிரமசீலம் ஆகிய இடங்களில் பல்கலைக் கழகங்கள் இருந்தன.

## ஆட்சி முறை

1] மாநிலங்களாக பிரிக்கப்பட்டு அரச குடும்பத்தினர்கள் ஆளுநர்களாக அமர்த்தப்பட்டனர்.

2] மாநிலங்களை விஷயாக்கள் எனப்படும் மாவட்டங்களாக பிரித்தனர்.

3] சமஸ்கிருதம் ஆட்சி மொழி ஆயிற்று.

4] சிவில் சட்டமும், குற்றவியல் சட்டமும் முதன் முறையாக வேறுபடுத்தி எழுதப்பட்டன.

5] தோரமானர், மிகரகுலர் போன்ற யூணத் தலைவர்கள் குப்தப் பேரரசை பலமிழக்கச் செய்தனர்.

6] புஷ்யமித்திரர், ஹுணர் போன்ற அந்நியர் படையெடுப்புகளால் குப்தப்பேரரசு வீழ்ச்சியடைந்தது.

winmeen.com